Literacy for a Billion

Movie: Sillunu oru Kadhal
Year: 2006

Song: Munbae Vaa
Lyricist: Vaali

முன்பே வா என் அன்பே வா
ஊனே வா உயிரே வா
முன்பே வா என் அன்பே வா
பூ பூவாய் பூப்போம் வா
நான் நானா கேட்டேன்
என்னை நானே
நான் நீயா நெஞ்சம் சொல்லுதே
முன்பே வா என் அன்பே வா
ஊனே வா உயிரே வா
முன்பே வா என் அன்பே வா
பூ பூவாய் பூப்போம் வா
பூ வைத்தாய் பூ வைத்தாய்
நீ பூவைக்கோர் பூ வைத்தாய்
மணப்பூவைக்கு பூ வைத்து
பூவைக்குள் தீ வைத்தாய் ஆ...
இளவேனில் மழையில் ஆட
அதில் நான்தான் நனைந்தே வாட
என் நாளத்தில்
உன் ரத்தம்
என் நாடிக்குள்
உன் சத்தம் உயிரே ஓ...
தோளிலே ஒரு சில நாளில்
தனியளாய் நான் தர
என் மனம் ஏங்கும்
முன்பே வா என் அன்பே வா
ஊனே வா உயிரே வா
நான் நானா கேட்டேன்
என்னை நானே
நான் நானா கேட்டேன்
என்னை நானே
முன்பே வா என் அன்பே வா
பூ பூவாய் பூப்போம் வா

நிலவிடம் வாடகை வாங்கி
விழிவீட்டில் குடி வைக்கலாமா
நாம் வாழும் வீட்டுக்குள்
வேறு யாரும் வந்தாலே தகுமா
தென்மலை தேக்கடி நீதான்
உந்தன் தோள்களில்
இடம் தரலாமா
நான் சாயும் தோள்மேல்
வேறு யாரும் சாய்ந்தாலே தகுமா
நீரும் செம்புல சேரும்
கலந்தது போலே கலந்திடலாம்
முன்பே வா என் அன்பே வா
ஊனே வா உயிரே வா
முன்பே வா என் அன்பே வா
பூ பூவாய் பூப்போம் வா
நான் நானா கேட்டேன்
என்னை நானே
நான் நீயா நெஞ்சம் சொல்லுதே
முன்பே வா என் அன்பே வா
ஊனே வா உயிரே வா
முன்பே வா என் அன்பே வா
பூ பூவாய் பூப்போம் வா

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*